இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 14-05-2025

# உச்சநீதிமன்றத்தின் நெற்றியடி!

**“பி.எம்.ஶ்ரீ. திட்டத்தில் கையெழுத்துப் போடுங்கள் என்று தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட முடியாது” என்று உச்சநீதிமன்றம் நெற்றியடி தீர்ப்பை வழங்கி இருக்கிறது.**

பா.ஜ.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி என்பவர் உச்சநீதி மன்றத்தில் ஒரு பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார். “நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக ஒன்றிய அரசு தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுமைக்கும் 14 ஆயிரம் பள்ளிகளை மேம்படுத்தப் போகிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்கள் இணையவில்லை. அவர்கள் ஒன்றிய அரசின் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட மறுக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையானது தமிழ் மொழிக்கும், தமிழர் நலனுக்கும் எதிரானது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது உண்மைக்கு மாறானது. அரசியல் உள்நோக்கம் கொண்டது. எனவே, தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களையும் இத்திட்டத்தில் கையெழுத்துப் போட உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும்” என்று அந்த மனுவில் கேட்டிருந்தார் பா.ஜ.க. வழக்கறிஞர்.

இந்த வழக்கானது உச்சநீதிமன்ற நீதிபதிகள் பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு முன்னால் விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுத்திருப்பவரை யார் என்று நீதிபதிகள் கேட்டார்கள். ‘நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்’ என்றும், ‘டெல்லியில் வசிக்கிறேன்’ என்றும் அவர் சொன்னார். “டெல்லியில் தானே வசிக்கிறீர்கள், உங்களுக்கு இந்தி கற்றுக் கொள்ள எந்தத் தடையும் இல்லையே, டெல்லியில் இருந்து இந்தியை தாராளமாகக் கற்றுக் கொள்ளுங்கள்” என்று நீதிபதிகள் அறிவுரை சொன்னார்கள்.

**“மாநிலங்கள், தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது மிகவும் சிக்கலான விவகாரம் ஆகும். நாட்டு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலைநாட்ட முடியும். ஆனால், தேசியக் கல்விக் கொள்கை போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாநிலங்களைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால் அதில் உச்சநீதிமன்றம் தலையிட முடியும். எனவே உங்கள் மனுவில் உள்ள கோரிக்கைகளை விசாரணை நடத்த விரும்பவில்லை”** என்று சொல்லி பா.ஜ.க. வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்துள்ளார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துங்கள் என்று மாநிலங்களுக்கு உத்தரவிட முடியாது என்று சொன்னது மட்டுமல்ல; தேசியக் கல்விக் கொள்கையானது அடிப்படை உரிமைகளை பாதித்தால் அப்போது தலையிடுவதாகவும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையானது, மாநிலத்தின் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாகவே அமைந்துள்ளது. பி.எம்.ஶ்ரீ. திட்டத்தில் தமிழ்நாடு சேரவில்லை என்பதற்காக, பள்ளிக் கல்வியின் வேறொரு திட்டத்துக்காக வழங்க வேண்டிய ரூ.2000 கோடி பணத்தை நிறுத்தி வைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

பள்ளிக் கல்வித் துறைக்கு தரும் நிதியை, ‘மும்மொழித் திட்டத்தை ஏற்காவிட்டால் தர மாட்டோம்’ என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறினார். **“பி.எம்.ஶ்ரீ. திட்டத்தை ஏற்காததால் தமிழ்நாடு 2 ஆயிரம் கோடி ரூபாய் இழக்கிறது என்று சொல்லும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே! தமிழ்நாட்டில் இருந்து நீங்கள் வாங்கிக் கொண்டு இருக்கும் வரியைத் தர மாட்டோம் என்று சொல்ல எங்களுக்கு ஒரு நொடி போதும்… மறந்துவிடாதீர்கள்”** என்று எச்சரிக்கை செய்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“இந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான் இரண்டாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும்பத்தாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும் போட மாட்டோம். இரண்டாயிரம் கோடி பணத்துக்காக இன்று கையெழுத்துப் போட்டால் இரண்டாயிரம் ஆண்டு பின்னோக்கி இந்த தமிழ்ச் சமுதாயம் போய்விடும்.அந்தப் பாவத்தை இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்ய மாட்டான்”** என்று சொன்னார். இந்தியாவில் இப்படி எந்த முதலமைச்சரும் பேசி இருக்க மாட்டார்கள். இப்படி பிளாக் மெயில் செய்யவே இதுபோன்ற திட்டங்களைப் பயன்படுத்துகிறது ஒன்றிய அரசு.

அவர்களுக்கு இந்தியைத் திணிக்க வேண்டும், சமஸ்கிருதத்தை புகுத்த வேண்டும். அதற்காகத்தான் தேசியக் கல்விக் கொள்கை, பி.எம்.ஶ்ரீ. பள்ளிகள் என்று பல்வேறு வித்தைகளைக் காட்டுகிறார்கள்.

‘புதிய கல்விக் கொள்கையானது தமிழுக்கும் தமிழர்க்கும் விரோதமானது என்று தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது உண்மைக்கு மாறானது, அரசியல் உள் நோக்கம் கொண்டது’ என்று வழக்கு தாக்கல் செய்பவர் சொல்லி இருக்கிறார். உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசிய பேச்சை அந்த வழக்கறிஞர் படிக்க வேண்டும். “தேசியக் கல்விக் கொள்கையானது சமஸ்கிருதத்தை முக்கியத் தூணாகக் கொண்ட இந்திய அறிவு முறைக்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கிறது” என்று பேசி இருக்கிறார். இதை வைத்துத்தான் தமிழுக்கும், தமிழர்க்கும் எதிரானது தேசியக் கல்விக் கொள்கை என்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

முதலில் இந்தி, அதன்பிறகு சமஸ்கிருதம், இவைதான் ஆட்சி மொழி ஆக வேண்டும் என்று சொல்வது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கை. அதனைத்தான் தேசியக் கல்விக் கொள்கை மூலமாக அமல்படுத்தப் பார்க்கிறார்கள்.

**அதனால்தான், ‘இது கல்விக் கொள்கையல்ல, காவிக் கொள்கை’ என்கிறார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இதனை உச்சநீதிமன்றத்தின் மூலமாக நுழைக்கப் பார்த்தார்கள். அதுவும் நடக்கவில்லை.**




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2025) சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தமிழரசு இதழ் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலையை திறந்து வைத்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள புகைப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்தவில்

## மாநிலத்தில் அரியலூர் மாவட்டம் முதலிடம்!

### மாணவ - மாணவிகளுக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் வாழ்த்து!

அரியலூர்,மே.14-

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்தது குறித்து போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:-

தற்பொழுது இது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாக உள்ளது. அரியலூர் மாவட்டம் மாநிலத்தில் முதன்மையாக வந்துள்ளது கடந்த காலங்களில் பின்தங்கி இருந்த இந்த மாவட்டம் கல்வியில் முன்னேறி இருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் மாநிலத்தின் முதலிடம் என்பதும் இந்த ஆண்டு பிளஸ் 2 வில் முதலிடம் என்பது இந்த மாவட்டத்தின் வளர்ச்சியை காட்டுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வழிகாட்டுதல் படி இந்த துறை மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது அதேபோல் அரியலூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் முதன்மை கல்வி அலுவலர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்கள் முழு உழைப்பையும் வழங்கி வெற்றி வாய்ப்பை இந்த மாவட்டத்தில் கொடுத்துள்ளார்கள். மாணவ மாணவிகளும் மிகச் சிறப்பான முயற்சி செய்து இந்த மகத்தான வெற்றிச் செய்தியை கொடுத்துள்ளார்கள்.

எனவே நமது மாவட்டத்தின் கல்வித்துறை சார்ந்த அத்தனை அதிகாரிகள் ஆசிரியர்களுக்கும் மாணவ செல்வங்களுக்கும் அரியலூர் மாவட்ட மக்கள் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அரசு,மற்றும் தனியார் பள்ளிகளிலும் முதன்மை இடத்தை மாணவ மாணவிகள் பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என கூறினார்.

மேலும் நான் கடந்த 2006-2011 ஆண்டில் ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது தேர்வை வெல்வோம் என்ற புத்தகம், கையேடு வழங்கி சிறந்த ஆசிரியர்களை கொண்டு வழிகாட்டி பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு கொடுத்தேன். தொடர்ந்து கல்விக்கு பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு செயல்பட்டு வருகிறேன். அதன் பெயரிலேயே 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் என்னால் முடிந்த அளவில் முக்கிய வினா விடைகள் அடங்கிய புத்தகத் தொகுப்பை வழங்கி சிறிய அளவிலான எனது பங்களிப்பை அளித்தேன். அதேபோல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாகச் சென்று மாணவ - மாணவிகளை சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்து உற்சாகப் படுத்தினேன். நான் வழங்கிய கையேடு அவர்களுக்கு உதவியாக இருந்திருக்கும் எனினும் ஆசிரியர்கள் பங்களிப்பு இதில் முக்கியமானது, மாணவ, மாணவியர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் தாய், தந்தை, ஆசிரியர்களின் தியாகத்தை நினைத்து நன்றாக படித்து தேர்வில் வெற்றி பெற்று உள்ளார்கள். அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம் என அமைச்சர் சா.சி.சிவசங்கர் கூறினார்.

### செம்பனார்கோயில் முன்னாள் ஒன்றியச் செயலாளர்

## மிசா பி.மதிவாணன் 2ம் ஆண்டு நினைவு நாள்! 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் வழங்கினார்!

மயிலாடுதுறை, மே.14-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஶ்ரீதர் ஆகியோர் தந்தை தொடர்ந்து செம்பனார்கோயில் ஒன்றிய செயலாளராக 25 ஆண்டுகளும், மாநில விவசாயத் தொரிலாளர் அணிச் செயலாளராக இருந்த மிசா பி.மதிவாணன் 2ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 500 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கும் மற்றும் ஆண்டுக்கு இரண்டு கல்லூரி படிப்பை தொடரும் 2 மாணவ, மணவிகளுக்கு 3 ஆண்டுகளுக்கான முழு கல்வி செலவு தொகையை வழங்கும் நிகழ்ச்சி செம்பனார்கோயிலில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மயிலாடுதறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி 500 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை மற்றும் மளிகைப் பொருட்களை வழங்கி பேசினார்.

நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அனபழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.என்.விஜயபாலன், எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என். ரவி,

மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், பி.முருகமணி, மங்கை எம்.சங்கர், ஏ.ஆர். ராஜா, கு.வைத்தியநாதன், எம்.அப்துல்மாலிக், அமிர்த. விஜயகுமார், பஞ்சு.குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், செல்ல சேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் செயலாளர்கள் என்.அண்ணாதுரை, எம். சம்சுதீன், எஸ்.கே.முத்து ராஜா, எம்.அன்புச்செழியன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், அ.காந்தி, ஹர்சத், பி.கென்னடி, ஜெ. கபிலன், வைத்தீஸ்வரன் கோயில் எஸ்.சுவாமிநாதன். சுபாநெடுஞ்செழியன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் - நாமக்கல் தெற்கு நகர தி.மு.க. சார்பில்

## “நாடு போற்றும் நான்காண்டு” அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், மே 14-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு” திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்டம், நாமக்கல் தெற்கு நகர தி.மு.க. சார்பில் 30 வது வார்டு அன்னை சத்யா நகர் ஜோதி மாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவருமான கே.ஆர்.என்.ராஜேஷ் குமார் வழிகாட்டுதலின் படி நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆர். ஆனந்த் தலைமையில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இப் பொதுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் ம.மோகநிதி, ஆகியோர் பொதுமக்களிடையே கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன், துணை மேயர் செ. பூபதி, நகர நிர்வாகிகள் ஈஸ்வரன், குட்டி (எ) செல்வக்குமார், சரோஜா மற்றும் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், வார்டு கழக நிர்வாகிகள், BLA 2 நிர்வாகிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டம், லெப்பைக்குடிக்காடு பள்ளிவாசல் நிர்வாகிகள் வஃபு வாரியம் சட்டம் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. கலந்து கொண்டு பேசினார். மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் மற்றும் ஜமாத் நிர்வாகிகள் உள்ளனர்.